सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saga

*புது தில்லி, 2000, மார்ச் 6ஆம் நாள் திங்கட்கிழமை/1922 சக*

---

The translation in Tamil of The Interest Tax Act, 1974 (45 of 1974), The Hindu Gains of Learning Act, 1930 (30 of 1930) The Government Seal Act, 1862 (3 of 1862), The Foreigners Act, 1946 (31 of 1946), The Agricultural Produce Cess Act, 1940 (27 of 1940), The Protection of Human Rights Act, 1993 (10 of 1994), The Prevention of Corruption Act, 1988 (49 of 1988), The Cess and Other Taxes on minerals (Validation) Act, 1992 (16 of 1992), The Architects Act, 1972 (20 of 1972) The Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973), The Benami Transactions (Prohibition) Act, 1988 (45 of 1988) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

*வட்டிவரிச் சட்டம், 1974 (45/1974), இந்துக் கல்விவழி ஈட்டியச் சொத்துச் சட்டம், 1862 (30/1862), அரசாங்க இலச்சினைச் சட்டம், 1862 (3/1862), அயல்நாட்டினர் சட்டம், 1946 (31/1946), வேளாண் விளைபொருள் மேல்வரிச் சட்டம், 1940 (27/1940), மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993 (10/1994), ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (49/1988), கனிமங்கள் மீதான மேல்வரி மற்றும் பிறவரிகள் (செல்லுந்தன்மையுடையதாக்குதல்) சட்டம், 1992 (16/1992), கட்டடக் கலைஞர்கள் சட்டம், 1972 (20/1972), அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973), பெயரிரவல் நடவடிக்கைகள் (தடைசெய்தல்) சட்டம், 1988 (45/1988) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியானவாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 52.00

# கனிமங்கள் மீதான மேல்வரி மற்றும் பிற வரிகள் (செல்லுந்தன்மையுடையதாக்குதல்) சட்டம், 1992

*(சட்ட எண் 16/1992)*

[1992, ஏப்ரல் 4]

குறித்தசில மாநிலச் சட்டங்களின்படி கனிமங்களின்மீது மேல்வரிகளையும் பிற குறித்தசில வரிகளையும் விதிப்பதையும், வசூலிப்பதையும் செல்லுந்தன்மையுடையதாக ஆக்குவதற்கான ஒரு சட்டம்.

இந்தியக குடியரசின் நாற்பத்துமூன்றாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

*குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.*

1. (1) இந்தச் சட்டம் கனிமங்கள் மீதான மேல்வரி மற்றும் பிற வரிகளைச் (செல்லுந்தன்மையுடையதாக்குதல்) சட்டம், 1992 என்று வழங்கப்பெறும்.

(2) இது இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 1922, பிப்ரவரி 15 ஆம் நாளன்று செல்லாற்றல் பெற்றதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*குறித்தசில மாநிலச் சட்டங்களையும் அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் செய்யப்பட்ட செயல்களையும் செல்லுந்தன்மையுடையதாக்குதல்.*

2. (1) இந்தச் சட்டத்தின் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள், கனிமங்கள் மீதான மேல்வரிகள் அல்லது பிற வரிகள் தொடர்பாக அவற்றில் அடங்கியிருக்கும் வகையங்கள், நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டிருந்தாற்போன்று செல்லுந்தன்மையுடையதாக இருத்தலும் எப்பொழுதும் இருந்துள்ளதாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்; மற்றும் அத்தகைய வகையங்கள் 1991 ஏப்ரல் 4 ஆம் நாள் வரையில் செல்லாற்றலில் இருந்து வருவதாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்புரை, தீர்பாணை அல்லது ஆணை எதுவும் எவ்வாறிருப்பினும் அத்தகைய சட்டங்கள் எவற்றின்படியும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், செய்யப்பட்ட செயல்கள், வகுக்கப்பட்ட விதிகள், வழங்கப்பட்ட அறிவிக்கைகள் அல்லது எடுக்கப்பட்டிருப்பதாக, செய்யப்பட்டிருப்பதாக, வகுக்கப்பட்டிருப்பதாக அல்லது வழங்கப்பட்டிருப்பதாகப் புலப்படுகிற நடவடிக்கைகள், செயல்கள், விதிகள், அறிவிக்கைகள் அனைத்தும், கனிமங்களின்மீது வசூலிக்கப்பட்ட மேல்வரிகள் அல்லது பிறவரிகள் ஆகியவை அத்தகைய நடவடிக்கைகள் வழங்கப்பட்ட அல்லது மேல்வரிகள் அல்லது பிறவரிகள் வசூலிக்கப்பட்ட அனைத்து முக்கியமான நேரங்களிலும், இந்தப் பிரிவு செல்லாற்றலில் இருந்து வந்திருப்பதைப் போன்று, நேர்வுக்கேற்ப, செல்லுந்தன்மையுடையனவாக எடுக்கப்பட்டிருப்பதாக, செய்யப்பட்டிருப்பதாக, வகுக்கப்பட்டிருப்பதாக, வழங்கப்பட்டிருப்பதாக அல்லது வசூலிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் அத்தகைய சட்டங்கள் எவற்றின்படியும் வசூலிக்கப்பட்ட மேல்வரிகள் எவற்றின்படியும் வசூலிக்கப்பட்ட மேல்வரிகள் அல்லது பிற வரிகளைத் திரும்பப பெறுவதற்காக நீதிமன்றம் எதிலும், உரிமை வழக்கு அல்லது பிற நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலோ தொடர்ந்து நடத்தப்படுதலோ ஆகாது.

(3) ஐயப்பாடுகளை அகற்றுவதற்காக, உட்பிரிவு (2) இல் உள்ள எதுவும், அத்தகைய சட்டங்கள் எவற்றின்படியும், அவரால் கொடுபட வேண்டிய தொகைக்கு மிகையாக அவரால் செலுத்தப்பட்ட மேல்வரி அல்லது வரி எதனையும் திரும்பப் பெறுவதைக் கோருவதிலிருந்து, நபர் எவரையும் தடுப்பதாகப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

*நீக்கறவும் காப்புரையும்.*

3. (1) கனிமங்கள் மீதான மேல்வரி மற்றும் பிற வரிகளைச் (செல்லுந்தன்மையுடையதாக்குதல்) அவசரச் சட்டம், 1992 ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. *அவசரச் சட்டம் 7/1992*

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தின் நேரிணையான வகையங்களின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## இணைப்புப்பட்டியல்

(பிரிவு 2ஐக் காண்க)

1. ஆந்திரப் பிரதேச (கனிம உரிமைகள்) வரிச்சட்டம், 1975 (ஆ.பி. சட்டம் 14/1975).

2. ஆந்திரப் பிரதேச (ஆந்திரப் பரப்பிடம்) மாவட்ட வாரியங்கள் சட்டம், 1920.

3. ஆந்திரப் பிரதேச (தெலுங்கானா பரப்பிடம்) மாவட்ட வாரியங்கள் சட்டம், 1955.

4. பீகார் மாநிலத்தில் பொருந்தத்தக்கதக்கதாயிருக்கிறதான மேல்வரிச் சட்டம், 1880 (வங்காளச் சட்டம் 9/1980).

5. கர்நாடக ஜில்லா பரிஷத்துகள், வட்ட ஊராட்சிச் சமிதிகள், மண்டல ஊராட்சிகள் மற்றும் நியாய ஊராட்சிகள் சட்டம், 1983 (கர்நாடகச் சட்டம் 20/1985).

6. கர்நாடக (கனிம உரிமைகள்) வரிச் சட்டம், 1984 (கர்நாடகச் சட்டம் 32/1984).

7. மத்தியப் பிரதேச காராதான அதிநியம் 1982 (ம.பி. சட்டம் 15/1982).

8. மத்திய பிரதேச உப்கார் அதிநியம் 1982 (ம.பி. சட்டம் 1/1982)

9. மகாராட்டிர மாவட்டப் பரிஷத்துகள் மற்றும் ஊராட்சிச் சமிதிகள் (திருத்தம் மற்றும் செல்லுந்தன்மையாக்குதல்) சட்டம், 1981 (மகாராட்டிரச் சட்டம் 46/1981).

10. ஒரிஸ்ஸா மேல்வரிச் சட்டம், 1962 (ஒரிஸ்ஸா சட்டம் 2/1962).

11. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1958 (தமிழ்நாடு சட்டம் 35/1958).